# O.S. No.21/2019

**19.09.2024**

**வா.சா. 1**

**திரு ராஜேந்திரன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் தாய் தந்தையாருக்கும் பாட்டன் பாட்டியாருக்கும் நாங்கள் இருவரும் பேரன்களாவர். எனது உடன் பிறந்த சகோதரிகள் ஜெயலெட்சுமி, வளர்மதி, பேபி, ராஜேஷ்வரி (எ) மாரியம்மாள், ராமேஷ்வரி, மகாலெட்சுமி ஆகிய 6 பேர் உள்ளனர். மேற்படி 6 உடன் பிறந்த சகோதரிகளையும் இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ரெகுநாத தேவர் மற்றும் கண்ணம்மாளுக்கு எனது 6 சகோதரிகளும் பேத்திகள் என்றால் சரிதான். எனது பாட்டியார் மற்றும் எனது தாயார் சொத்துக்களை அவர்களது ஆயுளுக்கு பிறகு எங்கள் இருவருக்கு மட்டுமே எழுதி வைத்தனர் என்றும் மற்ற சகோதரிகளுக்கு எனது தந்தையாரின் சொத்துக்கள் இருந்து வந்ததால் அவர்களுக்கு உயில் எழுதவில்லை என்றும் அதனால்தான் அவர்களை இந்த வழக்கில்

தரப்பினராக சேர்க்கவில்லை. எனது தகப்பனாரின் பெயரில் 4 மா சொத்துக்கள் இருக்கிறது. அந்த சொத்துக்கள் எனது தந்தை வழி பாட்டனார் பெயரிலும், பட்டா எனது தந்தை பெயரிலும் உள்ளது. கருணாகொல்லை என்ற இடத்தில் 4 மா நிலம் உள்ளது. அந்த இடம் எனது தந்தை வழி பாட்டனார் பெயரிலும், பட்டா எனது தந்தை பெயரிலும் உள்ளது. கரம்பையில் 3 மா பட்டா நிலம் உள்ளது, 60 வருடமாக எங்களது குத்தகை அனுபவத்தில் உள்ளது. செருமங்கலம் மதுரை வீரன் கோவிலுக்கு அருகில் சுமாராக 21 குழி நிலம் உள்ளது. இந்த சொத்துக்கள் அனைத்தும் உயிலில் காணாமல் எங்கள் குடும்பத்தினர் பெயரில் உள்ளது. உயில் சொத்தில் வீடு அன்னியில் மற்ற சொத்துக்கள் சம்மந்தமாக வங்கியில் கடன் பெற்று வங்கி எங்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் வங்கியிலிருந்து ஆஜராகாத காரணத்தால் தற்போது தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த உயிலை என் சகோதரிகள் ஒத்துக் கொண்டார்கள் என்பதை காட்டுவதற்கு எவ்விதமான ஆவணங்களும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. உயில் சம்மந்தமான விபரங்களை தெரிவித்து நான் என் சகோதரிகளுக்கு எதிராக எவ்வித வழக்குகளும் தாக்கல் செய்யவில்லை. அதில் 8 நபர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வழக்கில்

அந்த சொத்துக்களை சேர்க்கவில்லை. வங்கியில் எங்களால் கடன் பெறப்பட்டு கடன் தொகை செலுத்தாததால் வங்கியில் வழக்கு சொத்து சம்மந்தமாக வங்கியில் கடன் நிலுவையில் உள்ள நிலையில் அவர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்பதற்கு ஏதேனும் காரணம் உண்டா என்றால் இல்லை. நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்தது நான் அது சம்மந்தமாக அட்டென்ட் செய்யவில்லை என் தம்பிதான் அட்டென்ட் செய்தார். வங்கியில் உள்ள கடன் தொகையை நாங்கள் இன்றைய தேதி வரை அடைக்கவில்லை என்றால் சரிதான். வங்கியில் எவ்வளவு தொகை கடன் உள்ளது என்று என்னால் அறுதியிட்டு சொல்ல முடியாது. எனது உயில் ஆவணத்தில் எனது தாயார் நவநீதத்திற்கு A பட்டியல் சொத்துக்களை அனுபவித்துக் கொள்வதற்கு மட்டும்தான் உரிமை வழங்கப்பட்டுள்ளது எனவும் விற்பனை செய்ய யாதொரு உரிமையும் வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். உயிலில் கண்ட சொத்துக்கள் எனது தாய் வழி பாட்டனாருக்கு சொந்தமானது எனவும் எனது பாட்டனார் இறந்த பிறகு பாதி சொத்துக்கள் எனது பாட்டியாருக்கும் பாதி சொத்துக்கள் எனது தாயாருக்கும் என காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணம் ஏற்பட்ட

தேதியிலேயே எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ-11 ஆவணத்தில் கிரயம் பெற்றதாக கண்டுள்ள மோத்திரகுமார் என்பவர் எனது மைத்துனர் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.11 ஆவணத்தில் தாவா சொத்துக்கள் சம்மந்தமாக உயில் ஆவணம் ஏற்பட்டுள்ளதாக காணப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வீரசிங்கம் தனக்கு சாதாகமான வாசகங்களை கொண்டு ஆவணம் தயார் செய்துள்ளார். நவநீதம் அம்மாள் உண்மையிலேயே உயில் ஆவணம் ஏற்படுத்தியிருந்தால் உயில் ஆவணங்கள் குறித்து அதில் சொல்லியிருப்பார் அவ்வாறு ஏற்படாத காரணத்தினால்தான் சொல்லவில்லை என்றால் தவறு. வா.சா.ஆ.11 ஆவணம் பதிவு செய்த பிறகுதான் பதிவு செய்த விபரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.11 ஆவணத்தை ஏன் சேர்க்க கூடாது என்றால் என் சகோதரிகள் திருமணத்திற்காக விற்கப்பட்ட காரணத்தினால் அந்த சொத்தை வழக்கில் சேர்க்கவில்லை. வா.சா.ஆ.11 ஆவணத்தில் 6 அயிட்ட சொத்துக்களை விற்பனை செய்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணம் பாதி சொத்தினை பொறுத்து கட்டுப்படுத்தும்

எனவும் பாதி சொத்தினை பொறுத்து கட்டுப்படுத்தாது எனவும் சொன்னால் சரி. மோத்திரகுமாரை இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்க்க நடவடிக்கை எடுப்பேன்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

P SELVA MUTHU KUMARI

Digitally signed by P SELVA MUTHU KUMARI
Date: 2024.09.19 16:26:21 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.